அனைத்துலகத் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
INTERNATIONAL COUNCIL FOR EDUCATIONAL DEVELOPMENT OF TAMILS

# அரையாண்டுத்தேர்வு

## 2021/2022

# தமிழ்

## ஆண்டு 6

| | |
|---|---|
| **நேரம்:** 120 மணித்துளிகள்<br><br>**நாள்:** 29.01.2022 | **மொத்தப்புள்ளிகள்:** 80<br>(எழுதுதல் 65 புள்ளிகள், வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும் 15 புள்ளிகள்)<br><br>**பக்கங்கள்:** 12 |
| **பெயர்:** | |
| **தமிழ்ப்பள்ளி:** | |

## பகுதி 1 – எழுதுதல்

**1. பொருத்தமான விடையின் முன் புள்ளடி இடுக.**

1. உயிர்மெய் எழுத்துகளின் எண்ணிக்கை

☐ முப்பது ☐ பன்னிரண்டு ☐ இருநூற்றுப்பதினாறு

2. தமிழர் பண்பாடுகளுள் ஒன்று

☐ விருந்தோம்பல் ☐ புறங்கூறல் ☐ நன்றி மறத்தல்

3. இலையின் புதிதாகத் தோன்றிய நிலை

☐ கொழுந்து ☐ தளிர் ☐ பழுப்பு

4. ஒரு பொருளின் பெயரை உணர்த்தும் சொல்

☐ இடைச்சொல் ☐ பெயர்ச்சொல் ☐ வினைச்சொல்

5. உலகின் செம்மொழிகளுள் ஒன்று

☐ தமிழ் ☐ ஆங்கிலம் ☐ மலையாளம்

6. மனம் என்பதன் ஒத்தகருத்துச்சொல்

☐ குணம் ☐ உவகை ☐ உள்ளம்

7. அம்மம்மாவின் தாயார் எனக்கு

☐ பெரியம்மா ☐ பூட்டி ☐ மாமி

8. தம் கற்பனைகளால் பாடலுக்கு அழகு சேர்ப்பவர்

☐ ஓவியர் ☐ கவிஞர் ☐ சிற்பி

9. மெய் வாய் கண் மூக்கு செவி என்பன

☐ ஐம்பொறி ☐ ஐம்பூதம் ☐ ஐந்திணை

10. குழலிசை என்பதைப் பிரித்து எழுதினால்

☐ குழலி + இசை ☐ குழல் + இசை ☐ குழ + இசை

11. நடத்தல் என்பது

☐ காலப்பெயர் ☐ தொழிற்பெயர் ☐ குணப்பெயர்

12. பலா + பழம் என்பதைச் சேர்த்து எழுதினால்

☐ பலாப்பழம் ☐ பலாபழம் ☐ பலாற்பழம்

13. முகவுரை, உள்ளடக்கம், முடிவுரை ஆகிய பகுதிகளைக் கொண்டது

☐ கட்டுரை ☐ கவிதை ☐ நாடகம்

14. இடப்பெயருக்கு ஓர் எடுத்துக்காட்டு

☐ வேர் ☐ மரம் ☐ ஊர்

15. இந்தியாவையும் ஈழத்தையும் பிரிப்பது

☐ ஆங்கிலக்கால்வாய் ☐ பாக்கு நீரிணை ☐ நந்திக்கடல்

(15X1=15 புள்ளிகள்)

**2. கீழ்க்காணும் சொல்லியங்களின் உறுப்புகளை நிரற்கூட்டில் எழுதுக.**

1. மக்கள் அஞ்சல் மூலம் செய்திகளை அனுப்புகின்றார்கள்.
2. நான் தேர்வில் சிறந்த மதிப்பெண்களைப் பெறுவேன்.
3. அன்பரசி தாயகப் பாடல்களைப் பாடினாள்.

| இல | எழுவாய் | செயப்படுபொருள் | பயனிலை |
|---|---|---|---|
| 1. | | | |
| 2. | | | |
| 3. | | | |

(9X1=9 புள்ளிகள்)

**3. பொருத்தமான சொற்களை வைத்து நிரப்புக.**

| | | |
|---|---|---|
| உதவுதல் | வண்ணவண்ண | வாழிடத்தை |
| கதிரவனால் | கலீர்கலீர் | தடதட |

1. மங்கையின் காற்சலங்கை ________________________ என ஒலித்தது.
2. நாம் எமக்கான ________________________ அமைக்க வேண்டும்.
3. எமக்குக் ________________________ மழையும் ஒளியும் கிடைக்கின்றன.
4. தோட்டத்தில் ________________________ப் பூக்கள் மலர்ந்திருக்கின்றன.
5. மாணவர்கள் மாடிப்படிகளில் __________________ என ஓடினார்கள்.
6. ஒருவருக்குத் துன்பம் ஏற்படும்போது________________________ வேண்டும்.

(6X1=6 புள்ளிகள்)

**4. கீழ்க்காணும் சொற்களை உமது வாழிட மொழியில் எழுதுக.**

1. உடற்பயிற்சி ____________________________
2. தமிழ்ப்பள்ளி ____________________________
3. தொலைக்காட்சி ____________________________
4. மருத்துவர் ____________________________
5. இயற்கை ____________________________

(5X1=5 புள்ளிகள்)

**5. கீழ்க்காணும் வினாக்களில் நீங்கள் விரும்பிய ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. தமிழர் வாழும் நாடுகள் இரண்டு எழுதுக.

___________________________________________

___________________________________________

2. நீச்சலில் திறவினை ஆற்றிய ஈழத்தமிழர் யார்?

___________________________________________

___________________________________________

3. முற்காலத்தில் எழுதப்பட்ட தமிழ் இலக்கியங்கள் இரண்டு எழுதுக.

___________________________________________

___________________________________________

4. பனைமரத்தின் பயன்தரு பொருள்கள் இரண்டு எழுதுக.

___________________________________________

___________________________________________

5. உயர்திணைக்குரிய பால்களுள் இரண்டினை எழுதுக.

___________________________________________

___________________________________________

6. ஒலிப்பின் அடிப்படையில் உயிரெழுத்து வகைகளை எழுதுக.

___________________________________________

___________________________________________

7. ‘பறந்தன’ இச்சொல்லின் திணை, பால் என்பவற்றைத் எழுதுக.

திணை: ___________________________________

பால்: ___________________________________

(5X2=10 புள்ளிகள்)

**6. பாடலை வாசித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

மனதில் உறுதி வேண்டும்
வாக்கினிலே இனிமை வேண்டும்
நினைவு நல்லது வேண்டும்
நெருங்கின பொருள் கைப்பட வேண்டும்
கனவு மெய்ப்பட வேண்டும்
கைவசமாவது விரைவில் வேண்டும்
தனமும் இன்பமும் வேண்டும்
தரணியிலே பெருமை வேண்டும்

- மகாகவி பாரதியார்

1. மனதில் இருக்க வேண்டியது எது?

___

2. எதில் இனிமை இருக்க வேண்டும்?

___

3. எது மெய்ப்பட வேண்டும்?

___

4. நினைவு எவ்வாறு இருத்தல் வேண்டும்?

___

5. எதில் பெருமை வேண்டும்?

___

(5X1=5 புள்ளிகள்)

**7. கீழ்வருவனவற்றுள் ஒன்றினைப் பற்றி 75 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

1. தமிழர் பண்பாடு

2. ஆழிக்குமரன் ஆனந்தன்

3. தமிழ்மொழி

**உள்ளடக்கக் குறிப்புகள்:**

- தமிழ் மொழியின் சிறப்புகள்
- தமிழிலுள்ள நூல்கள்
- தமிழ்மொழி பேசப்படும் நாடுகள்

(15 புள்ளிகள்)

## பகுதி 2
## வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும்

**1. கீழ்க்காணும் பந்தியை வாசித்து, வினாக்களுக்கு விடை எழுதுக.**

மரங்கள் மக்களுக்குப் பெரும்பயன் தருகின்றன. சிறிய வித்துகளிலிருந்து மண்ணில் வேர்விட்டு மரங்கள் வளர்கின்றன. கிளைகள் விட்டுப் பச்சைப்பசேலென மரங்கள் வளர்ந்து நிற்கும்போது பார்ப்பதற்கு அழகாக இருக்கும். நெடுநெடு என உயரமாக வளர்ந்தாலும் தென்னை, பனை மரங்கள் கிளை விடுவதில்லை. மரங்களின் காய், கனிகள் உணவாகவும் மருந்தாகவும் பயன்படுகின்றன. மரங்கள் நிழலைத் தருகின்றன. மழைபெய்வதற்கு மரங்கள் உதவுவதோடு மண்ணரிப்பையும் தடுக்கின்றன. இவ்வாறு பயன்கருதாது மரங்கள் தரும் பயன்களை அனுபவிக்கும் நாம், எமது தேவைகளுக்காக அவற்றை வெட்டி அழித்துவிடுகிறோம். இதனால், வெப்பநிலை கூடுதல், மழைவளம் குறைதல், விலங்குகள், பறவைகளின் வாழிடங்கள் அழிக்கப்படுதல் போன்ற தீங்குகள் ஏற்படுகின்றன. எனவே, மரங்களை அழிக்காமல் இருப்பதோடு, புதிய மரங்களையும் வளர்ப்போம்.

1. மரங்கள் எப்போது பார்ப்பதற்கு அழகாக இருக்கும்?

   ________________________________________

2. கிளை விடாத மரங்கள் எவை?

   ________________________________________

3. உணவாகவும் மருந்தாகவும் பயன்படுபவை எவை?

   ________________________________________

4. மரங்களை ஏன் வெட்டி அழிக்கிறோம்?

   ________________________________________

5. மரங்களை அழிப்பதால் ஏற்படும் தீங்குகளுள் இரண்டு எழுதுக.

   ________________________________________

(5X2=10 புள்ளிகள்)

**2. கீழ்க்காணும் நாட்குறிப்பை வாசித்து, அதன் கீழுள்ள கூற்றுகள் சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (×) எனவும் அடையாளமிடுக.**

**இலக்கியனின் நாட்குறிப்பு**

**நாள்:** 16.01.2022 ஞாயிற்றுக்கிழமை

**சிறப்பான நிகழ்வு:**

இன்று தமிழர் திருநாளுக்கான பேச்சுப்போட்டி நடைபெற்றது. நானும் எனது தம்பி இனியனும் இப்பேச்சுப்போட்டியில் பங்குபற்றியிருந்தோம். அப்பாவும் அம்மாவும் எங்களை அழைத்துச் சென்றார்கள். எங்களுடன் அம்மம்மாவும் வந்திருந்தார். நான் 13 வயதுப்பிரிவிலே பங்குபற்றி 'தமிழர் திருநாள்' என்ற தலைப்பிலே பேசினேன். தம்பி 9 வயதுப்பிரிவிலே பங்குபற்றியிருந்தார். எல்லோரும் எங்களைப் பாராட்டினார்கள். அம்மம்மா எங்களைக் கட்டியணைத்து முத்தம் தந்தார்.

1. பேச்சுப்போட்டியில் இலக்கியன் மட்டும் பங்குபற்றினான். ( )
2. இலக்கியன் 'தமிழர் திருநாள்' என்ற தலைப்பிலே பேசினான். ( )
3. இலக்கியன் 9 வயதுப்பிரிவிலே பங்குபற்றினார். ( )
4. அப்பாவும் அம்மாவும் பேச்சுப்போட்டிக்கு அழைத்துச் சென்றார்கள். ( )
5. கட்டியணைத்து முத்தம் கொடுத்தவர் அப்பம்மா. ( )

(5X1=5 புள்ளிகள்)

# பணியகப் பயன்பாட்டுக்கு மட்டும்

| வினா எண் | புள்ளிகள் | முதலாம் முறை | இரண்டாம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| எழுதுதல் | | | | |
| 1 | 15 | | | |
| 2 | 09 | | | |
| 3 | 06 | | | |
| 4 | 05 | | | |
| 5 | 10 | | | |
| 6 | 05 | | | |
| 7 | 15 | | | |
| வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும் | | | | |
| 1 | 10 | | | |
| 2 | 05 | | | |
| | மொத்தப் புள்ளிகள் | | | |

| | முழுப்பெயர் | கையொப்பம் |
|---|---|---|
| முதலாம் முறை | | |
| இரண்டாம் முறை | | |
| மேற்பார்வையாளர் | | |